**வவுனியா வடக்கு பிரதேச சபை**

**வவுனியா மாவட்டம்**

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 மார்ச் 06 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 31 இல் சபையின் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வவுனியா வடக்கு பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடையுந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பின்பற்றப்பட்டிருந்திருக்க வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

சபைக்குரித்தான 130 குழாய்க் கிணறுகள் மற்றும் 225 வீதி விளக்குகள் என்பவற்றின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்காமையினால் சொத்துக்களின் பெறுமதி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

மீளாய்வாண்டிற்கான அரசிறைப் பதிவேட்டின் பிரகாரம் 05 வகையான அரசிறைப் பொழிப்புகளின் கூட்டுமொத்தம் ரூபா 24,568,061 அவதானிக்கப்பட்டதுடன் இது நிதிக்கூற்றுக்களுக்கு ரூபா 24,668,061 ஆகக் கொண்டு வரப்பட்டிருந்தமை தொடர்பில் ரூபா 100,000 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

#### 1.3.4 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபை நிதி நிர்வாக விதிகள் வித 153 | | மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய வருமதிகளின் கூற்றானது பிரதேச சபை – 7 எனும் படிவத்தில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள் | | |
| (i) | நிதி ஒழுங்கு விதி 571 | 1,150,532 | (i) இரு காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பில் சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>(ii) விபரம் தெரியாத வைப்புக்கணக்கு மீதி ரூபா 11,522 தொடர்பில் சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதி ஒழுங்கு விதி 1646 | | மாதாந்த வாகன ஓட்ட அட்டவணைகள் மற்றும் பொழிப்புக்கள் தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னதாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |
| (இ) | அரச நிர்வாக சுற்றறிக்கை 2016 திசெம்பர் 29 இன் 30/2016 ஆம் இலக்கம் | | வாகனங்களுக்கான எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் ரூபா 7,201,813 தொகையான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 14,529,883 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| இல. | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வாடகைகள் | 4,270,000 | | 5,241,500 | 1,073,894 | 3,517,000 | | 5,391,955 | 307,555 |
| (ii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 725,000 | | 3,397,655 | - | 414,000 | | 843,344 | - |
| (iii) | ஏனைய வருமானம் | 3,113,000 | | 5,004,445 | 13,673,356 | 5,741,400 | | 8,558,603 | 1,149,101 |

### 2.2.2 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

மீளாய்வாண்டில் 210 வியாபார நிறுவனங்களுக்கு வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிராமையால் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்களை உரியவாறு அறவிட்டுக் கொள்ள சபை தவறியிருந்தது.

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 94,910 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 1,518,374 தொகையான முத்திரைக் கட்டணங்கள் தொடர்ந்தும் பெறப்பட வேண்டியிருந்தன.

### 2.2.4 முரணான கொடுப்பனவு

மீளாய்வாண்டில் சபையின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளத்தின் தவறான கணிப்பீட்டின் காரணமாக ஊழியர் சேமலாப நிதியத்தினால் விதிக்கப்பட்டிருந்த தண்டப்பணம் ரூபா 17,266 சம்பந்தப்பட்ட தவறுக்கு பொறுப்பான காரணங்களினைக் கண்டறிந்து அவர்களிடம் உரியவாறு அறவிடப்பட்டிருக்காது சபை நிதியிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டுமீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### திண்மக்கழிவு முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) குப்பைகளை அகற்றுவதற்காக காணப்படுகின்ற இடங்களிற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) சுகாதார தொழிலாளர்கள் வருடாந்தம் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை

(iii) குப்பைகள் வெவ்வேறாக வகைப்படுத்தப்பட்டு சேகரிக்கப்படுவதில்லை.

(iv) சபையின் குப்பைகளை கொட்டும் இடங்களிற்கு கொண்டுவரப்படுகின்ற குப்பைகளை வகைப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்படவில்லை.

(v) கழிவு முகாமைத்துவம் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(vi) கழிவு முகாமைத்துவத்திற்குத் தேவையான தகவல்கள் மற்றும் தரவு முறைமையொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(vii) திண்மக் கழிவுகள் மீள்சுழற்சிக்குட்படுத்தப்படாது காணப்படுவதுடன் சூழல் பாதிப்படையக்கூடியவாறு தீ மூட்டி எரிக்கப்பட்டிருந்தது.

(viii) சபையினால் கழிவு முகாமைத்துவத்திற்காக செலவாகும் கிரயத்தினை திரட்டிக்கொள்வதற்காக குப்பைவரி அறவிடப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ix) சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள கடைகள் மற்றும் குடியிருப்பாளர்களுக்கு குப்பைகள் வெவ்வேறாக வகைப்படுத்தி உறைகளில் இட்டு எடுத்துசெல்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

நேர் முன்னைய ஆண்டின் வருடாந்த பொருட்கணக்கெடுப்பு சபையின் பரிந்துரைக்கமைவாக பாவனையிலீடுபடுத்தப்பட முடியாதவைகளாக அறிக்கையிடப்பட்ட 109 பொருட்கள் தொடர்பாக 2009 நவம்பர் 13 ஆம் திகதிய 438 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கைக்கு அமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆதனங்களுக்கு ஆதன மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு ஆதனவரி வருமானம் அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே பாதகமான ரூபா 10,596,278 தொடக்கம் சாதகமானதாக ரூபா 3,433,362 வரை அல்லது 31.23 சதவீதம் தொடக்கம் 77.13 சதவீதம் வரையான வேறுபாடுகளும் மதிப்பீட்டு செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினம் என்பவற்றுக்கிடையே பாதகமான ரூபா 12,220 தொடக்கம் சாதகமான ரூபா 10,571,356 வரை அல்லது 56.87 சதவீதம் தொடக்கம் 16.42 சதவீதம் வரையான வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

சபைக்கென உள்ளகக் கணக்காய்வு அலகொன்று உருவாக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆக்கபூர்வமான உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் பற்றி கணக்காய்வுக்கு கிடைத்திருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | **முறைமைகள்** | | **குறைபாடுகள்** |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | கணக்குப் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளினை நாளதுவரையாக்கத் தவறியமை. |
| | | (ii) | பொதுப் பேரேட்டை சமப்படுத்தத் தவறியமை. |